DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 107 of 2019

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 2

| | |
|---|---|
| Name | : திரு. ராஜேந்திரன் |
| Age | : 60 |
| Father's/Husband's Name | : குப்புச்சாமி |
| Village | : புளியம்பட்டி |
| Taluk | : பல்லடம் |
| Occupation | : இளநீர் கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of April 2022

முதல் விசாரணை: நாள்:06.04.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக்கொண்டு பல்லடத்திலிருந்து கேத்தனூர் செல்லும் சாலயில் கிருஷ்ணாபுரம் பிரிவு அருகே இளநீர் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை, கடந்த 2019 ஆம் வருடம் ஒரு நாள் இரவு சுமார் 8-8.30 மணியளவில் நான் இளநீர் கடையை கட்டி வைத்துவிட்டு சென்றபோது ஸ்ரீபதி ஓட்டல் அருகே கூட்டமாக இருந்தது. நான் அருகே சென்று பார்த்தபோது ஆம்புலன்சு மூலமாக அடிபட்டு காயமடைந்த ஒரு நபரை ஏற்றிச்சென்றார்கள். எவ்வாறு அவருக்கு காயமடைந்தது என்று எனக்கு தெரியாது.

அந்த இடத்தில் என் ன நடந்திருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் சாட்சி அரசுதரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியாக கு.வி. செய்ய அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அ.த.கு.வி.

போலீஸ் விசாரணையின்போது கடந்த 15.09.2019 ஆம் தேதி இரவு காமநாயக்கன்பாளையத்தில் உள்ள சபையர் கம்பெனி அருகே சுமார் 9.15 மணியளவில் பொள்ளாச்சி–பல்லடம் செல்லும் சாலையில் சாலையின் இடதுபுற ஓரமாக மேற்கு நோக்கி நடந்து சென்ற அசாருதீன் என்பவர் மீது அதேசாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 66 K 9252 என்ற பதிவெண் உடைய பேசன் புரோ இருசக்கர வாகனத்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக சொல்லிவிட்டு, தற்போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை இல்லை

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

D HARIRAM Digitally signed by D HARIRAM Date: 2022.04.06 18:05:03 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 107 of 2019

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 1

Name : திரு. வேலுச்சாமி

Age : 61

Father's/Husband's Name : குமாரசாமி

Village : மானாசிபாளையம்

Taluk : பல்லடம்

Occupation : செக்யூரிட்டி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of April 2022

முதல் விசாரணை: நாள்:06.04.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக்கொண்டு செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை, கடந்த 2019 ஆம் வருடம் ஒரு நாள் இரவு சுமார் 8.30 மணியளவில் நான் தாமரை ஸ்பின்னிங் கம்பெனியில் செக்யூரிட்டியாக பணியில் இருந்தேன். பொள்ளாச்சி–திருப்பூர் செல்லும் சாலையில் கிருஷ்ணாபுரம் பிரிவில் உள்ள ஒரு ஓட்டலில் நான் சாப்பாடு வாங்கிக்கொண்டிருந்தேன். அப்போது நேரம் சுமார் 7.30 மணி இருக்கும். சாப்பாடு வாங்கிக்கொண்டு வந்தபோது சாலையில் சத்தம் கேட்டது. நடந்து சென்றுக்கொண்டிருந்த 2 பையன்கள்மீது இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர்

மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. அதில் நடந்து சென்ற ஒரு நபருக்கும், இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபருக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. ஆம்புலன்சு மூலமாக அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை பார்க்கவில்லை. அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் யார் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசுதரப்பில் சாட்சி அரசுதரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியாக கு.வி. செய்ய அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அ.த.கு.வி.

போலீஸ் விசாரணையின்போது கடந்த 15.09.2019 ஆம் தேதி இரவு காமநாயக்கன்பாளையத்தில் உள்ள சபையர் பனியன் கம்பெனியின் மெயின் கேட்டில் வாட்ச்மேனாக நான் பணியில் இருந்தபோது இரவு சுமார் 9.15 மணியளவில் பொள்ளாச்சி–பல்லடம் செல்லும் சாலையில் சாலையின் இடதுபுற ஓரமாக மேற்கு நோக்கி நடந்து சென்ற அசாருதீன் என்பவர் மீது அதேசாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 66 K 9252 என்ற பதிவெண் உடைய பேசன் புரோ இருசக்கர வாகனத்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக சொல்லிவிட்டு, தற்போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை இல்லை

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

D HARIRAM
Digitally signed by D HARIRAM
Date: 2022.04.06 18:05:12 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்